# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

In the Court of the Additional District and Sessions Judge, Fast Track Court, Kumbakonam.

**Sessions Case No. 23/2019**

Deposition of witness for Prosecution P.W. 1

| | | |
|---|---|---|
| Name | : | ராமதாஸ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2020.

நான் தற்சமயம் கும்பகோணம் திருச்சேறை போஸ்ட் இஞ்சிகொல்லையில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு 2 பெண்கள், ஒரு மகன். மூத்த மகளை பாலசுப்ரமணியன் என்ற வழக்கறிஞருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். இரண்டாவது மகளை சிவராமன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். மகன் சூர்யா எம்.எஸ்சி படித்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். என் மகன் சூர்யா லீவில் எங்கள் ஊர் இஞ்சிகொல்லைக்கு வந்திருந்தார். எங்கள் தெருவில் வசிக்கும் முருகனுக்கும் சூர்யாவிற்கும் எதோ பிரச்சனை. என்ன பிரச்சனை என்று தெரியாது. 02.06.2018 சனிக்கிழமை அன்று மதியம் 2 மணிக்கு நான் எங்கள் தெருவில் உள்ள கொல்லையில் வேலை பார்த்துகொண்டிருந்தேன். அப்போது எங்கள் தெருவில் என் மன் சூர்யாவை வெட்டி போட்டுவிட்டார்கள் என்று தெருவில் இருப்பவர்கள் சொன்னார்கள். நான் வேலை பார்த்த இடத்திலிருந்து ஓடி போய் சம்பவம் நடந்த இடத்திற்குபோய் பார்த்தேன். ரவி என்பவரின் வீட்டு வாசலில் ஒரே ரத்தமாக இருந்தது. ஒரு அரிவாள் கீழே கிடந்தது. 3 வது

வீட்டு சாந்தி, ராஜசேகரன் எங்கள் தெருவில் உள்ளவர்கள் ரவி வீட்டு வாசலில் சம்பவ இடத்தில் இருந்தார்கள். நான் போய் என்ன நடந்தது என்று கேட்டேன். இது போல் ரவி எனது மகனை வெட்டிவிட்டதாக சாந்தி, ராஜசேகரன் என்னிடம் சொன்னார்கள். அதன்பிறகு சாந்தியையும் ராஜசேகரனையும் என் மகன் சூர்யா எங்கே என்று கேட்டேன். அவர்கள் என் பெரியம்மா மகன் பாலசுப்ரமணியம், அஜித், வீரமணி, நரேன் ஆகியோர் ஆட்டோவில் வைத்து கும்பகோணம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு போய் விட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு நான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அப்போது என் மகனுக்கு கழுத்தின் பின்பகுதியில் வெட்டு இருநதது. டாக்டர்கள் தையல் போட்டு கொண்டிருந்தார்கள். அப்போது என் மகனிடம் நான் என்ன நடந்தது என்று கேட்டேன். அப்போது என் மகன் சூர்யா முருகனுக்கும் எனக்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு சண்டை, அவன் என்னை கடைத்தெருவில் பார்த்து அடித்துவிட்டு தான்மறுவேலை பார்ப்பேன் என்று சொன்னான் என்றும், நான் நரேன், அஜித், வீரமணி ஆகியோரை அழைத்து சென்று முருகன் வீட்டில் கேட்டேன் என்று சொன்னான். முருகன் அம்மா என் பையன் வீட்டில் இல்லை என்று சொன்னார்கள் என்றும், முருகனின் அம்மாவிற்கும் என் மகன் சூர்யாவிற்கும் வாக்குவாதம் நடந்தது. எதிர்வீட்டு ரவி வீட்டு வாசலில் ஒரு சைக்கிள் இருந்தது. அதை என் மகன் சூர்யா தூக்கி உள்ளான். அதன்பிறகு ரவி என் மகனை பார்த்து ஏன்டா எடுக்கிறாய் என்று கேட்டிருக்கிறார். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டியிருக்கிறது. ரவி கம்பை எடுத்துவந்து சூர்யாவை அடிக்க வந்திருக்கிறார். அதன்பிறகு நரேன் என்ற பையன் பிடுங்கி கம்பை கீழே போட்டுள்ளார். மறுபடியும் கம்பை எடுத்து ரவி சூர்யாவை அடித்திருக்கிறார். அதன்பிறகு என் மகன் கம்பை கீழே பிடுங்கி போட்டுள்ளார். நீ ஆம்பளையா இருந்தா ஒண்டிகொண்டி வாடா என்று ரவி கேட்டுள்ளார். ரவி நீ என்னடா ஆம்பளையா என்று என்னை கேட்கிறாய் என்று அரிவாளை எடுத்து வந்து சூர்யாவை கழுத்தில் வெட்டுவிட்டார். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் பார்க்க முடியாது சுகம்ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக சொன்னார்கள், அங்கேயும் பார்க்க முடியாது தஞ்சாவூர் கே.ஜி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக சொன்னார்கள். நான், சின்ன மாப்பிள்ளை சிவராமன், அஜித் எல்லாரும் ஆம்புலன்ஸில் போனோம்.அங்கு என் மகன் இறந்துவிட்டார் என்று சொன்னார்களை. அதன்பிறகு கும்பகோணம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்து விட்டோம். அதன்பிறகு நான் நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் இரவு 8.30 மணிக்கு புகார் கொடுத்தேன். அவர்கள் நான் சொன்ன படி விவரத்தை எழுதி கொண்டு என்னிடம்கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அந்த புகாரை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான்

சொன்னதை தான் எழுதியிருந்தார்கள். அந்த புகார் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான். அந்த **புகார் அசாஆ.1**. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகளுக்காக)**

இல்லை.